இந்திய உச்சநீதிமன்றம்

2018-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 05-ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு.ஜே.செல்லமேஸ்வர்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.சஞ்ஜய் கிஷான் கௌல்

உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண் 3932 / 2009

ஆஷிம் ரஞ்சன் தாஸ் (இறப்பு)
சட்டமுறை சார்பாளர்கள் மூலம் .... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

ஷிபு போதக் மற்றும் பலர் .... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

மேற்கு வங்க நிலக் கையகப்படுத்துதல் சட்டம், 1953: பிரிவுகள் 44(2 ஏ), 2(ஜ), 4. 5 மற்றும் 6 - மாநிலத்தில் இடையீட்டாளரின் முழுமையாக்கப்பட்ட உரிமை - தீர்வு : மாநில அரசாங்கத்துடனான செயல்முறையின்படி இடையீட்டாளர் நிலத்தை வழங்குவதற்கு சட்டம் வழிவகை செய்துள்ளது, ஆனால் ஒரு இடையீட்டாளர் கூறுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகளின் கீழ் வரும் எந்த நிலங்களையும் உரிமையாக்கும் தேதியிலிருந்து உடைமையில் வைத்திருக்க உரிமை உள்ளது -

பொருண்மைகளின் அடிப்படையில், கே.பி.எஸ். என்பவர் முன்னால் இடையீட்டாளரின் கீழ் நிலத்தை வைத்திருந்தார் மற்றும் சுவாதீனத்தில் இருந்தார் - மேற்படி நிலமானது "ஜே.பி." மற்றும் "ஜி.பி."-க்கு மாற்றப்பட்டது - அதன் பிறகு, வருவாய் அதிகாரியால் பிரிவு 44(2 ஏ)-இன் கீழ் தன்னிச்சையான நடவடிக்கை எடுக்கப்பட்டு "ஜே.பி." மற்றும் "ஜி.பி." ஆகியோரது குத்தகை உரிமை ரத்து செய்யப்பட்டது - ஜி.பி. தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு - உயர்நீதிமன்றம் வருவாய் அதிகாரியின் நடவடிக்கையை நீக்கறவு செய்தது - அதன் பிறகு, ஜே.பி. இறந்த பின்னர் அவரது விதவை, அந்நிலத்தை ஒரு "ஆர்"-க்கு விற்றார், அவரிடமிருந்து மேல்முறையிட்டாளர் அதை 1987-இல் வாங்கினார் - இந்த இடைப்பட்ட காலத்தில் 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு 1980-ஆம் ஆண்டில் மேல்முறையீட்டாளர்களுக்கு விற்கப்படுவதற்கு முன்பே சொத்து மாற்றம் செய்யப்பட்டது - மாநில அரசு நடவடிக்கை எடுத்து 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு ரயத்துவாரி நிலத்தீர்வை ஆவணம் எழுதிக் கொடுத்து அவர்களை நிலத்திற்கு பட்டாதாரர்கள் ஆக்கியது - 1990-ஆம் ஆண்டில் "ஜே.பி."-இன் வாரிசுகளால் நிலமானது அரசுக்கு சேர்ந்தடைந்த நிலமாக கருத முடியாது எனக் கூறி நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது - நீதிப்பேராணை மனு அனுமதிக்கப்பட்டு அதிகாரிகளால் சட்டப்பிரிவு 44(2 ஏ)-இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நீக்கறவு செய்யப்பட்டது - அதன்பிறகு மேல்முறையீட்டாளர் "ஆர்" என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கிய நிலத்தைப்

பொறுத்து, தனது பெயரில் வருவாய் ஆவணங்களில் மாற்றம் செய்ய வேண்டுமென 1998-இல் நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்தார் - அந்த மனு தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டது - அனைத்து நிலத்தையும் மீண்டும் "கே.பி.எஸ்." பெயருக்கு மாற்றம் செய்யுமாறு வட்டார நிலம் மற்றும் நிலச் சீர்திருத்த அலுவலருக்கு தீர்ப்பாயம் உத்தரவிட்டது - அதன்பிறகு வட்டார நிலச் சீர்திருத்த அலுவலர் ரத்து செய்வதற்கான முன்மொழியை துணை மண்டல அலுவலர் நடவடிக்கைக்கு அனுப்பி வைத்தார் - துணை மண்டல அலுவலர் பட்டாதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பினார் - அந்த அறிவிப்பை எதிர்த்து 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/பட்டாதாரர்கள் மேல்முறையீடு செய்தனர் - 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் நிலத்தின் பட்டாதாரர்களாக உள்ள நிலையில், அவர்களது தரப்பைக் கேட்காமல் அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்ய தீர்ப்பாயம் உத்தரவு பிறப்பித்துள்ளது என கூறி மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது - வழக்கு மீண்டும் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட்டது - மேல்முறையீட்டில் தீர்வு : முதல் இரண்டு எதிர்மேல்முறையீட்டாளருக்கு வாய்ப்புகளை வழங்கிய பின்னர், தற்போது திரும்ப அனுப்பப்பட்டுள்ள இந்த வழக்கு தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும் என்பதால், மேல்முறையீட்டாளரின் இந்த நடவடிக்கையானது பயனற்ற செயல் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது - சரியோ அல்லது தவறோ, 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் பெயருக்கு நிலம் வழங்கப்பட்ட பின்னர் அவர்களை தரப்பினர்களாகச் சேர்க்காமல் மேல்முறையீட்டாளரால் நீதிப்பேராணை மனு தாக்கல்

செய்யப்பட்டு, பின்னர் அது தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது - இப்படியான சூழ்நிலையில் முதல் இரண்டு மேல்முறையீட்டாளருக்கு குறைந்தபட்சம் அவர்களது தரப்பு கேட்கப்படுவதற்கு அவர்களுக்கு உரிமை உள்ளது, இந்த அளவுகோலின் அடிப்படையில் தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவு மற்றும் பின்தொடர் வழக்கு நடவடிக்கைகள் செல்லக்கூடியவையல்ல என உயர்நீதிமன்றம் கண்டறிந்தது - மேற்கு வங்க நிலச் சீர்திருத்தம் மற்றும் குடிவாரச் சட்டம், 1997.

மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்வளித்தது.

தீர்வு : 1. முதல் இரண்டு எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு வாய்ப்புகள் வழங்கிய பின்னர் தற்போது திரும்ப அனுப்பப்பட்டுள்ள இந்த வழக்கானது தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும் என்பதால், மேல்முறையீட்டாளரின் இந்த நடவடிக்கையானது பயனற்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு ஒரு சோதிக்கப்பட்ட பொருண்மை வரலாற்றைக் கொண்டுள்ளது. மேற்கு வங்க நிலக் கையகப்படுத்துதல் சட்டம், 1953-இன் பிரிவு 44 (2 ஏ)-இன் கீழ் 1969-இல் துவக்கப்பட்ட நடவடிக்கைகள் உயர்நீதிமன்றத்தில் 01.06.1973-ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம் செயலிழக்கம் செய்யப்பட்டன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பின்னர் ஜி.பி. மட்டுமே வழக்கு நடவடிக்கையைத் தொடங்கினார். "ஜே.பி."-ஆல் அத்தகைய

நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 01.06.1973-ஆம் தேதியன்று வருவாய் அலுவலரின் நடவடிக்கைகள் நீக்கறவு செய்யப்பட்ட பிறகு "ஜே.பி."-இன் நிலத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதன் அடிப்படையில்தான் ஜூலை 1980-இல் சுவாதீனத்தில் இருப்பதாக 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் செய்த கோரிக்கையின்படி அரசு அதிகாரிகளால் பட்டா பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் அதே நிலத்தை 1982-இல் வாங்கியுள்ளார். மேலும், "ஜே.பி."-இன் வாரிசுகளின் கூற்றுப்படி, மேல்முறையீட்டாளர் கேட்டதன் பேரில் விழித்துக் கொண்டு 1990-இல் நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்திருக்க வாய்ப்புள்ளது. இந்த மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்கள் அந்த நடவடிக்கையில் தரப்பினர்களாக இருந்துள்ளார்கள். 01.06.1973-ஆம் தேதியிட்ட உத்தரவின் காரணத்தை முன்னிறுத்தி, இந்த மனு 17.07.1997-ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம் வெற்றி பெற்றுள்ளது. அதன் பிறகுதான் மேல்முறையீட்டாளர் நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார். சரியோ அல்லது தவறோ எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு நிலம் வழங்கப்பட்ட பின்னர், அவர்களை தரப்பினர்களாகச் சேர்க்காமல் மேல்முறையீட்டாளரால் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டு, பின்னர் அது தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில், முதல் இரண்டு மேல்முறையீட்டாளருக்கு குறைந்தபட்சம் அவர்களது தரப்பு கேட்கப்படுவதற்கு அவர்களுக்கு உரிமை உள்ளது. இந்த அளவுகோலின் அடிப்படையில், தீர்ப்பாயம் பிறப்பித்த 19.09.1990-ஆம் தேதிய உத்தரவு மற்றும்

பின்தொடர் வழக்கு நடவடிக்கைகள் செல்லக்கூடியவையல்ல என உயர்நீதிமன்றம் 07.05.2004-ஆம் தேதியிட்ட மேல்முறையீட்டு உத்தரவில் கண்டறிந்தது.

[பத்தி 18][488-எச்; 489-ஏ-டி.]

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண் 3932/2009

மேற்கு வங்க நிலச் சீர்திருத்தம் மற்றும் குத்தகை நீதிப்பேராணை மனு எண்.1045/2001-இல் கல்கத்தா உயர்நீதிமன்றத்தின் 07.05.2004-ஆம் தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து இந்த மேல்முறையீடு எழுகிறது.

முன்னிலையாகும் வழக்குரைஞர்கள்

மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் : திரு.எஸ்.கே.பட்டாச்சார்யா, திரு.எஸ்.கே.பௌனம், திரு.நிராஜ் பாபி பௌனம், திருமதி.டோம்தின்கன்பி கொய்ஜாம் மற்றும் திரு.ஹிமான்ஷி கம்பீர்.

எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் : திரு.ராவுஃப் ரஹீம், திரு.ராஜா சட்டர்ஜி, திரு.பியூஷ் சத்தேவ், திரு.ருனமோனி புயான், திரு.சஞ்சல் குமார் கங்குலி.

தீர்ப்புரை

மாண்பமை நீதிமன்றத்தின் பின்வரும் தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு.சஞ்சய் கிஷான் கௌல் அவர்களால் பகரப்பட்டது.

1. ஒரு கிருஷ்ணா பாத சுபாய் (சுருக்கமாக "கே.பி.எஸ்.") ஒரு முன்னாள் இடையீட்டாளர் காளி சரண் பிரமானிக் என்பவரின் கீழ் நிலத்தை உடைமையில் வைத்திருந்தார் மற்றும் சுவாதீனத்தில் இருந்தார். மேற்கு வங்காளத்தின் மௌசா ஜகதிபோட்டா உரிமைப் பதிவேட்டில் 'கே.பி.எஸ். பெயர் ஆர்.எஸ்.காட்டியன் எண்.15, மௌசா ஜகதிபோட்டா, மேற்கு வங்காளம்' என முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1962-ஆம் ஆண்டில் "கே.பி.எஸ்" வசம் இருந்த 14.89 ஏக்கர் நிலம் ஜிதேந்திர லால் பால் (8.26 ஏக்கர்) மற்றும் கோலப் பாலா சாஹா மோண்டல் (6.63 ஏக்கர்) ஆகிய இருவரது பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது. மேற்கு வங்க நிலக் கையகப்படுத்துதல் சட்டம், 1953 (இதன் பிறகு "கையகப்படுத்துதல் சட்டம்" என குறிப்பிடப்படும்)-இன் பிரிவு 44 (2 ஏ)-இன் கீழ் சம்மந்தப்பட்ட வருவாய் அதிகாரிகளால் தாமாக முன்வந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தான் பிரச்சினையின் தோற்றம் ஆகும். நடவடிக்கைகளின் தன்மையை அறிய கையகப்படுத்துதல் சட்டத்தின் ஒரு சிறிய கண்ணோட்டத்தை கொடுக்க வேண்டியது அவசியமாகும். கையகப்படுத்துதல் சட்டத்தின் முன்னுரை பின்வருமாறு கூறுகிறது :-

"சொத்து நிலங்களை அரசு கையகப்படுத்தும்போது, அதில் இடையீட்டாளர்களின் உரிமைகள், ரயத் மற்றும் அதன் கீழ் -"ரயத்துகளின்" சில உரிமைகள் மற்றும் சொத்து நிலங்களில் இணைந்த சில நபர்களின் உரிமைகள் ஆகியவற்றை வழங்குவதற்கான ஒரு சட்டம்"

2. கையகப்படுத்துதல் சட்டத்தின் பிரிவு 2(ஐ) "இடையீட்டாளர்" என்பதை கீழ்க்கண்டவாறு வரையறுக்கிறது:-

"**பிரிவு 2. வரையறைகள்** -

(i) "இடையீட்டாளர்" என்பது ஒரு உரிமையாளர், நிலவார முறையில் வைத்திருப்பவர், நிலவார முறையின் கீழ் உள்ளவர் அல்லது ரயத்துக்கு மேல் உள்ள எந்த இடையீட்டாளரும் அல்லது விவசாயம் அல்லாத குத்தகைதாரர் மற்றும் நிலவார பணி முறையில் வைத்திருப்பவர் ஆகியோரையும் உள்ளடங்கும். சுரங்கங்கள்

மற்றும் கனிமங்கள் பொறுத்து குத்தகைதாரர் மற்றும் துணை குத்தகைதாரரையும் உள்ளடக்கியதாகும்;"

3. கையகப்படுத்துதல் சட்டத்தின் அத்தியாயம் II, "சொத்துக்களை கையகப்படுத்துதல் மற்றும் அதில் உள்ள இடையீட்டாளர்களின் உரிமைகளை" கூறுகிறது. தொடர்புடைய வகையம் பின்வருமாறு :

"**பிரிவு 4. சொத்துக்களை வழங்குதல் மற்றும் இடையீட்டாளர்களின் உரிமைகள் பற்றிய அறிவிப்பு** :- (1) மாநில அரசு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் எந்த மாவட்டத்திலோ அல்லது மாவட்டத்தின் ஒரு பகுதியிலோ அமைந்துள்ள அனைத்து சொத்துக்களும் மற்றும் மேற்படி சொத்தில் இடையீட்டாளருக்கு உள்ள உரிமைகளும் அறிவிப்பின் மூலம் அனைத்து வில்லங்கங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டு அரசுக்கு சேர்ந்தடைந்ததாக அறிவிக்கலாம். "

....

"**பிரிவு 5. அறிவிப்பின் விளைவு** - (1) பிரிவு 5-இன் கீழ் ஒரு அறிவிப்பை உரிய முறையில் வெளியிடும்போது, சேர்ந்தடைந்த அந்த தேதியிலிருந்து -

xxxx xxxx xxxx xxxx xxxx

(சி) (பிரிவு 6-இன் துணைப்பிரிவு (3)-இன் வகையங்களுக்கு உட்பட்டு விவசாயம் அல்லாத குத்தகைதாரர் வைத்திருக்கும் எந்த நிலமும்) இடையீட்டளரின் கீழ் மற்றும் அத்தியாயம் VI-இன் விதிகள் நடைமுறைக்கு வரும்வரை இடையீட்டாளரின் கீழ் நிலத்தை வைத்துள்ள ஒவ்வொரு ரயத்தும், அரசிடம் இடையீட்டாளராக உள்ளது போல் அரசின் கீழ் இடையிட்டாளராக அதே நிபந்தனைக்கு உட்பட்டு சேர்ந்தடையும் தேதிக்கு முன்னர் இருந்தது போல் இருப்பார்:

வரம்புரையாக, விவசாயம் அல்லாத குத்தகைதாரர் எவரேனும் வாடகையை முழுவதுமாகவோ அல்லது பகுதி பொருளாகவோ, பகுதி பணமாகவோ செலுத்தினால், மேற்கூறிய கூறில் எது கூறப்பட்டிருப்பினும், மாநில அரசால் பிரிவு 42-இன் கூறு (ii)-இல் பரிந்துரைக்கப்பட்ட

முறையில் மாநில அரசால் குறிப்பாக அதிகாரம் அளிக்கப்பட்ட வருவாய் அலுவலர் நிர்ணயிக்கும் தொகையை செலுத்த வேண்டும்:

வரம்புரையாக, மேலும், முதல் வரம்புரையின் கீழ் வாடகையை நிர்ணயம் செய்து வருவாய் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் அத்தகைய அதிகார அமைப்பிடம் குறித்துரைக்கப்படும் காலத்திற்குள் மேல்முறையீடு செய்யலாம்;"

....

.....

"**பிரிவு 6 – சில நிலங்களை தக்க வைத்துக் கொள்வதற்கான இடையீட்டாளரின் உரிமை** :- (1) பிரிவு 4 மற்றும் 5-இல் யாது கூறப்பட்டிருப்பினும், ஒரு இடையீட்டாளர் துணைப்பிரிவு (2)-இன் விலக்கு பத்தியில் கூறப்பட்டுள்ளவற்றைத் தவிர அந்த துணைப்பிரிவின் படி வகையங்களுக்கு உட்பட்டு

சேர்ந்தடைந்த தேதி முதல் அமலுக்கு வர தக்க வகையில் நிலத்தை உடமையில் வைத்திருக்க உரிமையுண்டு -

(ஏ) வீட்டு நிலங்களில் உள்ள நிலம்;

(பி) அனுமதி மற்றும் உரிமத்தின் அடிப்படையில் இடையீட்டாளரின் கீழ் வாடகைதாரராக இல்லாத இடையீட்டாளர் அல்லது வேறு நபர்களுக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளுக்கு தொடர்புடைய நிலம்;

விளக்கம் :- இந்தக் கூறின் நோக்கங்களுக்காக 'வாடகைதாரர்' என்பது கல்கத்தா திகா குடிவாரச் சட்டம், 1979 (மே.வ. சட்டம் II/1949)-இல் வரையறுக்கப்பட்டுள்ள 'திகா வாடகைதாரரை" உள்ளடக்காது;

(சி) மேற்படி கூறு (ஏ)-இன் கீழ் தக்க வைக்கப்பட்ட நிலத்தைத் தவிர்த்து, அவரது *காஸ்* சுவாதீனத்தில் உள்ள விவசாயம் அல்லாத நிலம் அவரின் கீழ் நிலம் வைத்துள்ள

அனுமதி மற்றும் உரிமம் வகையில் வாடகைதாரராக இல்லாத நபரையும் சேர்ந்து பதினைந்து ஏக்கருக்கு மேற்பட்டு இருக்கக் கூடாது:

வரம்புரையாக, ஆனால் (ஏ) மற்றும் (சி) கூறின் கீழ் ஒரு இடையீட்டாளரால் தக்கவைக்கப்பட்ட நிலத்தின் மொத்த பரப்பு அவரால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய இருபது ஏக்கருக்கு மிகாமல் இருக்க வேண்டும்:

வரம்புரையாக, மேலும் கூறு (சி)-இன் கீழ் இடையீட்டாளரால் தக்க வைக்கப்பட்ட நிலம் அல்லது அதன் எந்தப் பகுதியும், வழங்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்குள் பயன்படுத்தப்படாவிட்டால், ஒரு ஆதாய அல்லது உற்பத்தி நோக்கத்திற்காக மாநில அரசாங்கத்தால் அந்த நிலம் அல்லது அதன் ஒரு பகுதி நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1894 (I/1894)-இன் பிரிவுகள் 23 மற்றும் 24-இல் குறிப்பிடப்பட்டுள்ள வகைமுறைகளுக்கிணங்க நிர்ணயிக்கப்பட்ட இழப்பிட்டுத் தொகைக்குட்பட்டு மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும்;

(டி) இருபது ஏக்கருக்கு மிகைப்படாத *காஸ்* சுவாதீனத்தில் உள்ள விவசாய நிலத்தை அவர் தேர்ந்தெடுக்கலாம்:

வரம்புரையாக, மேலும் டார்ஜிலிங் மாவட்டத்தின் அத்தகைய பகுதிகளில், மாநில அரசின் அறிவிப்பின் மூலம் மலைப்பாங்கான பகுதிகள் என அறிவிக்கப்பட்டால், ஒரு இடையீட்டாளர் அவரது *காஸ்* சுவாதீனத்தில் உள்ள அனைத்து விவசாய நிலங்களையும் அல்லது அவர் தேர்ந்தெடுக்கும் எந்தப் பகுதியையும் தக்க வைத்துக் கொள்ள அவருக்கு உரிமையுண்டு;

(இ) குளத்து மீன்வளம்;

xxx xxx xxx xxx xxx

(2) துணைப்பிரிவு (1)-இன் கீழ் எந்தவொரு நிலத்தையும் உடைமையில் வைத்திருக்க உரிமையுள்ள ஒரு இடையீட்டாளர் அத்தகைய விதிமுறைகளுக்கு உட்பட்டு வழங்கப்பட்ட நாளிலிருந்து குத்தகைதாரராக அத்தகைய

நிலத்தை நேரடியாக அரசின் கீழ் வைத்திருப்பதாக கருதப்படுவார், மேலும் இந்த சட்டத்தின் விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் அத்தியாயம் V-இன் கீழ் இறுதியாக வெளியிடப்பட்ட உரிமைகள் பதிவேட்டில் உள்ளிடப்பட்டுள்ளபடி, கூறு (ஹச்) அல்லது (ஐ)-இல் குறிப்பிடப்பட்ட நிலத்தைத் தவிர மற்றவற்றிற்கு நிர்ணயிக்கப்பட்ட மற்றும் அத்தகைய வாடகையை செலுத்துவதற்கு உட்பட்டதாகும்:

வரம்புரையாக, மேலும், தேயிலைத்தோட்டம், பழத்தோட்டம், ஆலை, தொழிற்சாலை அல்லது பணிமனை உள்ளடக்கிய நிலம் அல்லது குளத்து மீன்வளம் குத்தகையின் கீழ் சேர்ந்தடைவதற்கு முன்பாக இருப்பின், அத்தகைய குத்தகை அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாநில அரசு செய்யத் தகுந்ததாகக் கருதும் அத்தகைய மாற்றங்களுக்கு உட்பட்டு மாநில அரசால் வழங்கப்பட்டதாகக் கருதப்படும்."

(முக்கியத்துவம் அளிக்கப்பட்ட பகுதி)

4. மேற்கூறிய வகையங்களின் விளைவு என்னவென்றால், செயல்முறைப் பின்பற்றியவுடன், பிரிவு 6(1)-இல் கூறப்பட்டுள்ள விதிவிலக்குகளுக்கு உட்பட்டு இடையீட்டாளருக்கு உள்ள உரிமையானது எவ்வித வில்லங்கமுமின்றி அரசை சேர்ந்தடைந்துவிடும்.

5. சுருக்கமாக, மாநில அரசாங்கத்துடனான செயல்முறையின்படி இடையீட்டாளருக்குள்ள உரிமையானது அரசைச் சேர்ந்தடைந்துள்ளது. ஆனால், நிலம் கையகப்படுத்துதல் சட்டப் பிரிவு 6-இன் உட்பிரிவு (1)-இன் கூறு (ஏ) முதல் (இ) வரை குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகளின் கீழ் வரும் எந்த நிலங்களையும் இடையீட்டாளர் அவரது சுவாதீனத்தில் அரசின் குத்தகைதாரர் என்ற முறையில் வைத்திருக்க உரிமையுண்டு.

6. வருவாய் அலுவலரால் பிரிவு 44(2 ஏ)-இன் கீழ் அதிகாரம் செயல்படுத்தப்பட்டுள்ளது. தொடர்புடைய வகையங்கள் பின்வருமாறு :

> "**பிரிவு 44. உரிமைப் பதிவேட்டின் வரைவு மற்றும் இறுதி வெளியீடு** - (1) உரிமைப் பதிவேடு தயாரிக்கப்படும் போது அல்லது திருத்தப்படும் போது வருவாய் அலுவலர் அவ்வாறு தயாரிக்கப்பட்ட அல்லது திருத்தப்பட்ட வரைவு

பதிவேட்டை பரிந்துரைக்கப்பட்ட முறையிலும், குறிப்பிட்ட காலத்திலும் வெளியிட வேண்டும், மேலும் அத்தகை பிரசுரத்தின் போது அதில் ஏதேனும் உள்ளீடு அல்லது விடுபடுதல் தொடர்பாக பெறப்படும் ஆட்சேபணைகளைப் பரிசீலிக்க வேண்டும்:

வரம்புரையாக, பிரிவு 5(ஏ)-இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட எந்த உத்தரவும் இந்த உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஆட்சேபணையின் அடிப்படையில் மீண்டும் திறக்கப்படாது.

(2) மாநில அரசு இதற்கென செய்யக்கூடிய விதிகளின்படி அத்தகைய ஆட்சேபணைகள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு முடிக்கப்பட்ட பின்னர், வருவாய் அலுவலர் இறுதியாக பதிவேட்டை வடிவமைத்து, அத்தகைய பதிவேடு பரிந்துரைக்கப்பட்ட முறையில் இறுதியாக வெளியிடப்பட வேண்டும், அத்தகைய இறுதி வெளியீட்டின் உண்மையை உறுதி செய்யும் வகையில் அதில் சான்று செய்து அதன் தேதி, அவரது பெயர் மற்றும் அதிகாரப்பூர்வ பதவியின் பெயர் ஆகியவற்றைப் பதிவு செய்ய வேண்டும்."

xxx xxx xxx xxx xxx

(2 ஏ) மாநில அரசால் சிறப்பு அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலர் ஒன்பது மாதங்களுக்குள் விண்ணப்பத்தின் பேரில் அல்லது (அறுபது ஆண்டுகளுக்குள்) தாமாக முன்வந்து உரிமைப்பதிவேடு இறுதியாக வெளியிடப்பட்ட நாளிலிருந்து அல்லது மேற்கு வங்க நிலக் கையகப்படுத்துதல் (இரண்டாவது திருத்தம்) அவசரச் சட்டம், 1957 (மேற்கு வங்க பிரகடனம் X /1957) நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து இதில் எது பிந்தையதோ அதிலிருந்து தொடர்புடைய நபர்களுக்கு உரிய வாய்ப்பளித்து அவர்களது தரப்பைக் கேட்டு அதற்கான காரணத்தைப் பதிவு செய்து உட்பிரிவு 2-இன் கீழ் இறுதியாக வெளியிடப்பட்ட உரிமைப் பதிவேட்டைத் திருத்தலாம்:

வரம்புரையாக, மேற்கூறிய பத்தியில் உள்ள எதுவும், எந்த ஒரு பதிவையும் திருத்தும் போது பிரிவு 5 ஏ-இன் கீழ்

இயற்றப்பட்ட எந்த உத்தரவையும் மாற்ற அல்லது ரத்து செய்ய அதிகாரம் அளிப்பதாகக் கருதக்கூடாது:

மேற்கு வங்க நிலக் கையகப்படுத்துதல் (இரண்டாவது திருத்தம்) அவரசச் சட்டம், 1957 நடைமுறைக்கு வருவதற்கு முன்பாக, இந்தப் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் முன்பாக உட்பிரிவு 1-இல் பெறப்பட்ட ஆட்சேபணை தொடர்பாக வருவாய் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டிருப்பின், எந்த அலுவலரும் இந்த உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் பெறவோ அல்லது தாமாக முன்வந்து பதிவைத் திருத்தவோ முடியாது. மேலும் இந்தப் பிரிவில் யாது கூறப்பட்டிருப்பினும், மேற்கு வங்க நிலக் கையகப்படுத்துதல் (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம், 1957 அமலுக்கு வருவதற்கு முன்பாக உள்ள மேல்முறையீடுகள் அந்தச் சட்டம் அமலுக்கு வராதது போன்றே தொடர்ந்து கேட்கப்பட்டு முடிக்கப்பட வேண்டும்."

7. வருவாய் அலுவலர் 07.04.1969-ஆம் தேதியன்று கையகப்படுத்துதல் சட்டத்தின் பிரிவு 44(2 ஏ)-இன் கீழ் அதிகாரத்தை சுயமாக பயன்படுத்த முயன்றார், அதன்பிறகு, அவர் 12.05.1969-ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம் ஜிதேந்திர லால் பால் மற்றும் கோலப் பாலா சாஹா மோண்டல் ஆகியோரது குத்தகை உரிமையை ரத்து செய்தார். இந்த உத்தரவிற்கு எதிராக கோலப் பாலா சாஹா மோண்டலால் மட்டும் உரிமையியல் விதி எண். 2915(நீ) / 1969 என்ற நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்தார். கல்கத்தா உயர்நீதிமன்றத்தின் கற்றறிந்த தனியமர் நீதியரசர் 12.05.1969-ஆம் தேதியிட்ட உத்தரவை 01.06.1973-ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம் நீக்கறவு செய்தார். அவ்வாறு நீக்கறவு செய்ததற்கான காரணம் இரண்டு, ஒன்று கோலப் பாலா சாஹா மோண்டல் மாநில அரசுக்கு வாடகை செலுத்தி நிலத்தின் அனுபவத்தில் உள்ளார். மேலும், 1962-இல் அவர் வாங்கிய பின்னர் அவரது பெயருக்கு பதிவுகள் மாற்றப்பட்டுள்ளது. மேலும், அவருக்கு அறிவிப்பு கொடுக்காமலேயே, பிரிவு 44(2 ஏ)-இன் படியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டவாதாக பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் வேறு யாருக்கும் பினாமிதாரராக உள்ளாரா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் வருவாய் அலுவலருக்கு இல்லை என்பதாகும்.

8. மறுபடியும், ஜிதேந்திர லால் பாலின் மறைவுக்குப் பிறகு அவரது விதவையான குசும்பலா பால் நிலத்தை திரு.ரதீந்திர சந்திர ஹோருக்கு விற்றார். மேல்முறையீடு செய்துள்ள அஷிம் ரஞ்சன் தாஸ் முதலில் மறைந்த ஜிதேந்திர லால் பால்

வைத்திருந்த மேற்படி 8.26 ஏக்கர் நிலத்தை திரு.ரதீந்திர சந்திர ஹோரிடமிருந்து வாங்கினார்.

9. கோலப் பாலா சாஹா மோண்டல் மட்டுமே முந்தைய நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்திருப்பதால், ஜிதேந்திர லால் பாலின் நிலம் மாநில அரசிடமே உள்ளது என்பதன் அடிப்படையில், மாநில அரசு நடவடிக்கை எடுத்து 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு ரயத் நிலத்தீர்வை எழுதிக் கொடுத்துள்ளது. எங்கள் முன்புள்ள 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஜூலை 1980-இல் பதிவு செய்யப்பட்ட பட்டா வழங்கப்பட்டதன் மூலம் நிலத்தின் பட்டாதாரர்கள் ஆவர். இவ்வாறுதான் மேல்முறையீட்டாளருக்கு விற்பனை செய்வதற்கு முன்பாக 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு நிலத்தின் உரிமை வந்துள்ளது.

10. 1990-ஆம் ஆண்டில் ஜிதேந்திர லால் பாலின் வாரிசுதாரர் அதாவது குசும்பலா பால் மற்றும் பலர், சி.ஏ.எண்.8959/1990-இன் கீழ் நிலமானது மாநில அரசுக்கு சேர்ந்தடைந்த நிலமாகக் கருதமுடியாது என கூறி நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்தனர். இந்த நடவடிக்கையில் மேல்முறையீட்டாளரான ஆவிம் ரஞ்சன் தாஸ் 8-வது மனுதாரராகவும், 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் முறையே 10 மற்றும் 13 எதிர்மனுதாரர்களாகவும் சேர்க்கப்பட்டிருந்தனர். உயர்நீதிமன்றம் 01.06.1973-ஆம் தேதியன்று பிறப்பித்த முந்தைய உத்தரவின் அடிப்படையில் 17.07.1997-

ஆம் தேதியிட்ட உத்தரவின்படி, நீதிப்பேராணை மனுவை அனுமதித்தது. நிலக் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 44(2 ஏ)-இன் கீழ் எதிர்மனுதாரர் - அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை நீக்கறவு செய்யப்பட்டது.

11. எங்களுக்கு முன்புள்ள மேல்முறையீட்டாளர் திரு.ரதீந்திர சந்திர ஹோரிடமிருந்து வாங்கிய நிலத்தைப் பொறுத்து, பட்டா மாற்றம் செய்ய உத்தரவிடக்கோரி நீதிப்பேராணை மனு எண் 4327(நீ)/1998-ஐ 1998-இல் தாக்கல் செய்யும்வரை எங்கள் முன்னால் உள்ள 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களால் மேற்கண்ட 17.07.1997-ஆம் உத்தரவிற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவானது, மேற்கு வங்க நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் குடிவார தீர்ப்பாயச் சட்டம், 1997-இன் (இதன் பின்னர் மே.வ. நிலச்சீர்திருத்தங்கள் மற்றும் குடிவாரச் சட்டம் என குறிப்பிடப்படும்) கீழ் அமைக்கப்பட்ட தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டு, இடமாற்றப்பட்ட மனு எண் 401/2000 என மனு எண்ணிடப்பட்டது. மேற்கு வங்க நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் குடிவாரச் சட்டத்தின் பிரிவு 4 தீர்ப்பாயத்தை அமைப்பது, பிரிவு 9 உயர்நீதிமன்றத்திலிருந்து வழக்குகளை மாற்றுவது, பிரிவு 11 உயர்நீதிமன்றத்தின் இரு நீதியரசர்கள் ஆயத்தில் மேல்முறையீடு செய்வது தொடர்பாக கூறுகின்றது.

12. தீர்ப்பாயம் 19.09.2000-ஆம் தேதியிட்ட உத்தரவின் அடிப்படையில் அனைத்து நிலங்களையும் மீண்டும் 'கே.பி.எஸ்.' பெயரில் பதிவு செய்ய வட்டார நிலம் மற்றும் நிலச் சீர்திருத்த அதிகாரிக்கு உத்தரவிட்டது. 22.03.2001-ஆம் தேதியிட்ட உத்தரவின்படி மாநில அரசு இந்த உத்தரவைத் திரும்பப் பெறுவதற்கான முயற்சி தோல்வியடைந்தது. இதன் விளைவாக, வட்டார நிலம் மற்றும் நிலச் சீர்திருத்த அலுவலர், தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக மண்டல துணைப்பிரிவு அதிகாரிக்கு ரத்து செய்வதற்கான முன்மொழியை அனுப்பினார். அதனடிப்படையில் மண்டல துணைப்பிரிவு அதிகாரி பட்டாதாரர்களுக்கு விசாரணைக்காக அறிவிப்பு அனுப்பினார்.

13. முறையே 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களான ஷிபு போதக் மற்றும் தபன் மாலிக் ஆகியோர் மேற்கு வங்க நிலச்சீர்திருத்தம் மற்றும் குடிவாரச் சட்டப்பிரிவு 11-இன் கீழ் மேல்முறையீடு மற்றும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் சரத்து 226-இன் கீழ் செயலுறுத்து நீதிப்பேராணை வேண்டுரை கோரி கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் மேற்கு வங்க நி.சீ.கு.நீ.ம. எண்.1045/2001-இன் கீழ் மனுவைத் தாக்கல் செய்து உயர்நீதிமன்றத்திலிருந்து மாற்றப்பட்டு தீர்ப்பாயத்தால் மேல்முறையீட்டு எண்.401/2000-இல் 19.09.2000 மற்றும் 22.03.2001-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை நீக்கறவு செய்யுமாறும், மேலும் மேற்கு வங்க நிலச் சீர்திருத்தச் சட்டம், 1955 (இதன் பிறகு மே.வ. நிலச் சீர்திருத்தச் சட்டம் என

குறிப்பிடப்படும்)-இன் படி உரிய அலுவலரால் பட்டாவை ரத்து செய்ய 17.04.2001-ஆம் தேதியிட்டு அனுப்பப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளை நீக்கறவு செய்யுமாறும் கோரிக்கை செய்யப்பட்டது. திரு.ஷிபு போதக் மற்றும் திரு.தபன் மாலிக் ஆகியோர் விசாரணைக்கு வாய்ப்பளித்து கேட்காமல் பட்டாதாரர்களின் பட்டாவை ரத்து செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்தனர்.

14. மேற்கு வங்க நிலச் சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டதற்கான நோக்கம் அதன் முகப்புரையில் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் பார்க்கலாம், அது கீழ்க்கண்டவாறு கூறுகிறது :

> "அனைத்து சொத்துகள் மற்றும் அதிலுள்ள சில உரிமைகள் சேர்ந்தடைந்ததன் விளைவாக மற்றும் (நிலச் சீர்திருத்தங்கள் தொடர்பான சட்டத்தை ஒருங்கிணைப்பதற்கான) நில உரிமையை மாநிலத்தில் சீர்திருத்தம் செய்ய ஏற்பட்ட ஒரு சட்டம்"

மே.வ. நிலச் சீர்திருத்தச் சட்டம் (எந்த நோக்கத்திற்காகவும் நிலத்தை வைத்திருக்கும் ஒரு நபர் அல்லது நிறுவனம்) நிலத்தின் மீதான உரிமைகளை வழங்க முயல்கிறது.

15. கோலப் பாலா சாஹூா மோண்டலின் நடவடிக்கையின் அடிப்படையில் மாநில அரசுக்கு சேர்ந்தடைந்ததாக கூறப்பட்ட உரிமையானது உயர்நீதிமன்றத்தால் 01.06.1973-இல் நீக்கறவு செய்யப்பட்டுள்ள நிலையில் முதல் இரண்டு மேல்முறையீட்டாளர்களுக்கு ஜூலை 1980-இல் வழங்கப்பட்ட பட்டா உட்பட பட்டாக்கள் அனைத்தும் இல்லா நிலையது என எங்கள் முன்னால் மேல்முறையீட்டாளர்களால் எதிர்வாதம் செய்யப்படுகிறது. ஜிதேந்திர லால் பாலிடமிருந்து உரிமையைப் பெற்ற மேல்முறையீட்டர்களால் 1990-ஆம் ஆண்டில் தான் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில் 1மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு நிலம் மாற்றம் செய்யப்பட்டிருப்பது தெரியவருகிறது. மேலும், நிலக் கையகப்படுத்துதல் சட்டப் பிரிவு 44(2 ஏ)-இன் படியான நடவடிக்கையில் ஏற்கனவே பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு இறுதிநிலைக்கு வந்துவிட்ட நிலையில் முதல் இரண்டு மேல்முறையீட்டாளர் மேல்முறையீடு எண் 401/2000-இல் தங்களை தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என புகார் அல்லது குறை கூற முடியாது என மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

16. எவ்வாறாயினும் 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேற்கூறிய மேல்முறையீடு 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் சம்பந்தப்பட்ட நிலத்தின் பட்டாதாரர்களாக உள்ள

நிலையில் தீர்ப்பாயமானது அவர்களை விசாரிக்காமல் அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்ய உத்தரவிட்டது கவனிக்கப்பட்டு 07.05.2004-ஆம் தேதியிட்ட மேற்படி எதிர்ப்பிற்குள்ளான உத்தரவின் மூலம் அனுமதிக்கப்பட்டது. 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் 1980-ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நிலத்தின் சுவாதீனத்தில் இருப்பினும், உரிய அதிகாரியிடமிருந்து ஏப்ரல் 2001-இல் அறிவிப்பு அனுப்பப்பட்ட பின்னர்தான் பட்டா ரத்து செய்யப்பட்ட விபரம் அவர்களுக்கு தெரியவந்தது. உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்ட நீதிப்பேராணை மனுவில் 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் பெயரில் உள்ள பட்டாவை மேல்முறையீட்டாளர் பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மட்டுமே செய்யப்பட்டுள்ள நிலையில், அதில் 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை. மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாக மனையை மாற்றுவதற்கு தீர்ப்பாயம் ஏற்கனவே கண்டறிந்து உத்தரவிட்டுள்ள நிலையில் வட்டார நிலம் மற்றும் சீர்திருத்த அதிகாரியால் செய்யப்படும் விசாரணை எந்த விளைவையும் ஏற்படுத்தாது என கருத்து தெரிவிக்கப்பட்டது. எனவே, தீர்ப்பாயத்தின் 19.09.2000-ஆம் தேதியிட்ட உத்தரவு மற்றும் அனைத்து நடவடிக்கைகளும் நீக்கறவு செய்யப்பட்டது. எனினும், பிரச்சினை தொடர்பாக தகுதியுடைய குறித்துரைகள் எதுவும் செய்யப்படவில்லை. இயற்கை நீதி கொள்கைகளை மீறியதன் காரணமாக நீக்கறவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என உயர்நீதிமன்றத்தால் கூறப்பட்டுள்ளது. முதல் இரண்டு

மேல்முறையீட்டு எதிர்மனுதாரர்கள் ஆணையுறுதி ஆவணங்கள் தாக்கல் செய்ய அவகாசம் அளித்து, அதன் பின்னர் மேல்முறையீட்டாளர் எழுப்பிய பிரச்சினைக்கு நற்கூறின் அடிப்படையில் முடிவு செய்ய தீர்ப்பாயத்திற்கு உத்தரவிடப்பட்டது.

17. இந்த வழக்கை மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு திரும்ப அனுப்பியதால் மனக்குறைவுற்ற மேல்முறையீட்டாளர் அதனை எதிர்த்தார். இந்த மேல்முறையீடானது, முதலில் 2004-ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டு 14 ஆண்டுகள் கடந்துவிட்டது என்பதை நாம் கவனிக்கலாம்.

18. முதல் இரண்டு எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு வாய்ப்புகள் வழங்கிய பின்னர் தற்போது திரும்ப அனுப்பப்பட்டுள்ள இந்த விவகாரம் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும் என்பதால், மேல்முறையீட்டாளரின் இந்த நடவடிக்கையானது பயனற்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என நாங்கள் நம்புகிறோம். இந்த வழக்கு ஒரு சோதிக்கப்பட்ட பொருண்மை விபரங்களை கொண்டுள்ளது. மேற்கு வங்க நிலக் கையகப்படுத்துதல் சட்டம், 1953-இன் பிரிவு 44 (2 ஏ)-இன் கீழ் 1969-இல் துவக்கப்பட்ட நடவடிக்கைகள் உயர்நீதிமன்றத்தில் 01.06.1973-ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம் செயலிழக்கம் செய்யப்பட்டன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பின்னர் ஜி.பி. மட்டுமே நடவடிக்கையை தொடங்கினார். "ஜே.பி."-ஆல் அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

01.06.1973-ஆம் தேதியன்று வருவாய் அலுவலரின் நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்ட பிறகு "ஜே.பி."இன் நிலத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதன் அடிப்படையில்தான், ஜூலை 1980-இல் சுவாதீனத்தில் உள்ளதாக 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் செய்த கோரிக்கையின்படி அரசு அதிகாரிகளால் பட்டா பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் அதே நிலத்தை 1982-இல் வாங்கியுள்ளார். "ஜே.பி."-இன் வாரிசுகள் மேல்முறையீட்டாளர் கேட்டதன் பேரில் விழித்துக்கொண்டு 1990-இல் நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்திருக்க வாய்ப்புள்ளது. இந்த மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்கள் அந்த நடவடிக்கையில் தரப்பினர்களாக இருந்துள்ளார்கள். 01.06.1973-ஆம் தேதியிட்ட உத்தரவின் காரணத்தை முன்னிறுத்தி, இந்த மனு 17.07.1997-ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம் வெற்றி பெற்றுள்ளது. அதன் பிறகுதான் மேல்முறையீட்டாளர் நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார். சரியோ அல்லது தவறோ எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு நிலம் வழங்கப்பட்ட பின்னர், அவர்களை தரப்பினர்களாகச் சேர்க்காமல் மேல்முறையீட்டாளரால் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டு, பின்னர் அது தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில், முதல் இரண்டு மேல்முறையீட்டாளருக்கு குறைந்தபட்சம் அவர்களது தரப்பு கேட்கப்படுவதற்கு அவர்களுக்கு உரிமை உள்ளது. இந்த அளவுகோலின் அடிப்படையில், தீர்ப்பாயம் பிறப்பித்த 19.09.1990-ஆம் தேதிய உத்தரவு மற்றும்

பின்தொடர் நடவடிக்கைகள் செல்லக்கூடியவையல்ல என உயர்நீதிமன்றம் 07.05.2004-ஆம் தேதியிட்ட மேல்முறையீட்டு உத்தரவில் கண்டறிந்தது.

19. எனவே, இந்த மேல்முறையீட்டில் எந்த நற்கூறும் இல்லை என்று நாங்கள் கருதி தரப்பினர்களின் செலவுதொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள உத்தரவிட்டு மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்கிறோம்.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "